## குளித்தலை வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) செயல்முறைகள்
## முன்னிலை: திரு.ர. பாஸ்கரன்.

---

ந.க. ஆ2/395/2025 நாள்: 19.12.2025.

பொருள் மனைப்பிரிவு – குளித்தலை ஊராட்சி ஒன்றியம் – வைகைநல்லூர் ஊராட்சி– வைகைநல்லூார் வடக்கு கிராமம் சர்வே எண் 257/1A1 அடங்கிய மனை எண்கள் 1 முதல் 12 வரை பரப்பளவு 2100 ச.மீ (ஏக்கர் 0.52செண்ட்) – அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மண்டலம் அவர்களின் ந.க.எண் 1AQ12G8A/2025/TCP நாள். 13.03.2025
2. திருமதி.சத்யா க/பெ பரமசிவம்ம் 279, 7th Cross அண்ணா நகர், கிழக்கு, பிள்ளையார்கோவில் தெரு, குளித்தலை.

* * * * * *

**உத்தரவு**

குளித்தலை ஊராட்சி ஒன்றியம், வைகைநல்லூார் ஊராட்சி, வைகைநல்லூார் வடக்கு கிராமம் சர்வே எண் 257/1A1 அடங்கிய மனை எண்கள் 1 முதல் 12 வரை பரப்பளவு 2100 ச.மீ (ஏக்கர் 0.52செண்ட்) அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் காணும் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் உத்தரவின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி தனியரால் உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் ஒப்புதல் கட்டணம் கீழ்காணும் விவரப்படி செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | தலைப்பு விவரம் | தொகை. ரூ |
|---|---|---|
| 1 | Layout approval fees | 45206 |
| 2 | Layout Inspection fees, and scrutiny fees | 17000 |
| | Total | 62206 |

எனவே கீழ்காணும் நிபந்தனைகளின்படி மேற்கணும் சர்வே எண்ணில் அமையப்பெறும் 1 முதல் 12 வரை உள்ள மனைபிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:-**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கரூர் அவர்கள் பிறப்பித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்படுள்ளது.
2. இம்மனைபிரிவு ஒப்புதல் உத்தரிவு குடியிருப்பு மனைகளுக்கு மட்டுமே ஆகும். வணிக கட்டிடங்கள் கட்ட பயன்படுத்த இந்த உத்தரவு பொருந்தாது.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் உத்தரவு பெறாமல் மனைகளை உட்பிரிவு செய்யவோ, அல்லது குடியிருப்பு மனை வணிக கட்டிட மையமாக மாற்றம் செய்யவோ இயலாது.
4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு நீர் பிடிப்பு பகுதி மற்றும் மயான பகுதியாக கண்டறியப்பட்டால் அனுமதி உத்தரவு இரத்து செய்யப்படும்.
5. மனைப்பிரிவு ஒப்புதல் உத்தரவு மனைப்பிரிவிற்கு மட்டுமே பொருந்தும். இதில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு தனியாக விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும்.
6. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைபிரிவிற்கு மனுதாரரால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் இந்த உத்தரவு உடன் இரத்து செய்யப்படும்.
7. வசூல் செய்யப்பட்ட ஒப்புதல் கட்டடத்தில் தணிக்கை துறையின் கீழ் ஏதேனும் மீதம் கட்டணம் செலுத்த தெரிவித்தால் உடன் செலுத்த மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார். தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு இரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், குளித்தலை.

19.12.25

பெறுதல் :-

திருமதி.சத்யா க/பெ பரமசிவம்
279, 7th Cross அண்ணா நகர் , கிழக்கு,
பிள்ளையார்கோவில் தெரு,
குளித்தலை.
கரூர் மாவட்டம்.–639104

நகல்:-

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுலவர் (கி.ஊ), வைகைநல்லூர் ஊராட்சி.
ஊராட்சி ஒன்றியம், குளித்தலை.